முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்தஇந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த

மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 29 திகதி முதல்

சுபகிருது வருடம் ஆனி மாதம் 05 திகதி வரை

**(12.06.2022 ஞாயிறு முதல் 19.06.2022 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. சக்திமிகு வேலவன் வழிபாட்டை
   சகலரும் செய்து நிலை உயர
   யுக்தியாக சன்மார்க்க வழிகாட்டி
   உயர் ஞானம் தரும் அரங்கனே
2. அரங்கன் நீ கேட்க அகத்தியனும்
   அருளுவேன் இந்தியா தமிழகத்தில்
   வரங்களென சுபகிருது விடைதிங்கள்
   வல்லமைபட இருபான்நவ திகதி மேல்
3. மேலாக மிதுன திங்கள் பஞ்ச திகதி வரை
   மொழிகுவேன் நடக்கும் நிகழ்வாக
   கோலமதாய் வருங்கால பலன்குறித்த
   கூறிடுவேன் வார ஆசி தன்னை
4. தன்னிலே தமிழகம் தானும்
   தணிகாசலனின் அருள் பூமி
   நன்னயமாய் தமிழக உரிமைகள்
   நடுநாயகமாகக் காக்கப்படவே
5. காப்பாக தமிழக வருவாய்கள்
   கட்டுப்படுத்தும் வரி வகைகள்
   ஒப்புக் கொண்டு நலத்திட்டமாக
   உயர்வாக மேலிருந்து தடையிலா
6. தடையிலா தமிழகத்துக்கு கிட்டி
   தனித்துவம் வளர்ச்சிநிதியாக
   சோடையிலா மாற்றம்பெற
   சுபிட்சம் கீழும் மேலுமான அரசுகள்
7. அரசுகள் பரிபூரணமாகக் கண்டு
   ஆபத்து பின்னடைவு இல்லா
   அரசுகளாக நெருக்கம் கூடி
   ஆற்றல் மிக்க மாற்றம் காணும்
8. காணுகின்ற ஆளுமைகளும்
   கண்டதொரு இனமதபேத
   ஞானமிலா வழிகளை கைவிட்டு
   ஞானபூமி இதுவெனும் துணிவுபட

9. துணிவுபட சேவை ஆற்றிட
துயர் துடைப்பதுடன் மக்களின்
கணிவு மிக்க தலைமையாக
கருணை காக்கும் சக்திமிக்க வர்களாக
10. ஆகவே தேறி படிப்படியாய்
ஆறுமுகனார் ஆசிபெற்ற
வகையான ஞான ஆட்சி தருவர்
வழங்கிய வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம்:

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 29ம் நாள் 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆனி 05ம் நாள் 19.06.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள்:

எல்லாம் தந்தருளும் ஆற்றல் மிக்க வழிபாடாகிய முருகப்பெருமானின் வழிபாட்டினை உலகமக்கள் அனைவரும் செய்து அவரவரும் கடைத்தேறி நிலை உயர்ந்திட வேண்டியே அதற்குரிய தகுந்த மார்க்கம் ஆகிய சன்மார்க்கத்தினை உலகோர்க்கு உபதேசித்து அவர்களுக்கு வழிகாட்டி உயர் ஞானமும் அளித்து காத்தருளி கடைத்தேற்றும் ஞானகுரு ஆறுமுக அரங்க மகா தேசிகனே தாம் அகத்திய மகரிஷி எம்மிடம் எதிர்கால பலன் குறித்து கேட்கவே இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் வைகாசிமாதம் 29ம் நாள் 12.06.2022 ஞாயிற்றுக் கிழமை முதல் ஆனி மாதம் 05ம் நாள் 19.06.2022 ஞாயிற்று கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை அகத்திய மகரிஷியானும் வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இந்தியா தமிழகமானது ஞானத்தலைவன் முருகப்பெருமானின் அருள் பூமியாகும். தமிழகத்தின் உரிமைகள் எல்லாம் நடுநிலையாக நின்று காக்கவேண்டும். தமிழகத்தின் வருவாய் களுக்கு ஆதாரமான வரிவசூலில் கட்டுப்படுத்தும் வரிவகைகள் வருவாய்களை நலத் திட்டங்களாக மத்திய அரசும் செயல்படுத்தி மத்திய அரசு மாநிலங்களுக்கு திருப்பி தடையின்றி அளித்து வந்தால் தமிழகத்துக்கு உரிய வருவாய்கள் பெருகும் அவை வளர்ச்சி நிதிகளாக ஆகியே மத்திய மாநில அரசுகள் இணைந்து விரைந்து முன்னேற்றம் அடையும். மத்திய மாநில அரசுகளிடையே நல்ல இணக்கமான சூழல் பெருகி எந்தவித ஆபத்தும் பின்னடைவும் இல்லாத வகையிலே முன்னேறி ஆற்றல் மிக்க உயர்ந்த மாற்றங்களை தேசம் அடையும்.

நாட்டை ஆட்சி புரிவோர் இன மத பேதம் இல்லாமல் செயல்பட்டு பிரிவினைகள் அற்ற நிலையில் நல்ல செயல்பாடுகளை காண வேண்டும். ஞானிகள் சூழ்ந்த ஞானபூமி நமது தேசம் என்ற எண்ணத்துடன் ஆட்சி புரிவோர் செல்பட்டு துணிவுடன் தர்மத்தின் வழியில் சென்று மக்களின் துயரங்களை அகற்றி கணிவுமிக்க தலைவர்களாக செயல்பட்டு வந்தால் அவரெல்லாம் கருணை மிக்க வர்களாக ஆகி சக்தி மிக்கவர்களாகவும் ஆகி கடைத்தேறி ஞானிகள் ஆசியையும் ஞானத்தலைவன் முருகப்பெருமானின் ஆசியையும் பெற்று முறையான கருணை மிக்க ஞான ஆட்சியை நாட்டிற்கு தருவார்கள் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–

––––––––––